# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF III ADDITIONAL CITY CIVIL COURT, CHENNAI-600 104

SC. No.8/2019

Deposition of witness for Prosecution / Defence / Court

PW - 1

Name : திலிப்

Address :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 21$^{th}$ day of February, 2020 .

## Dated: 21.02.2020

நான் தற்போது எண்.9 பிளாக்.21 ஐ.சி.எப் காலனி, அத்திப்பட்டு, அம்பத்தூர் குடியிருக்கிறேன். இதற்கு முன்பு நம்பர்.57, கக்காஞ்சி நகர், ஐ.சி.எப். சென்னை - 38ல் குடியிருந்தேன். அங்கு நானும் என் மனைவி தாமரைச்செல்வி, மகன் பிரகாஷ் ராஜ், மகள் ப்ரித்தாவுடன் குடியிருந்தோம். நுங்கம்பாக்கம் ஸடார்லிங் சாலையிலுள்ள வருமான வரித்துறை அலுவலகத்தில் துப்புரவு தொழிலாளியாக வேலை செய்கிறேன். 1.1.2018 அன்று காலை 7 மணிக்கு என் மகன் பிரகாஷ் ராஜின் கூட்டாளியான சூர்யா தகப்பனார் பெயர் விமலாநாதன் என் மகனை என் வீட்டிற்கு வந்து டாய்லெட் போகலாம் என்று அழைத்தார். ஆவடி ரோடு சிக்னல் அருகிலுள்ள பொது கழிப்பிடத்திற்கு பின்புறமுள்ள இடத்திற்கு போகலாம் என்று என் மகனை அழைத்து சென்றார். அப்போது சூர்யா ஒரு கருப்பு கவரை வைத்திருந்தார். நான் அது என்னவென்று கேட்டதற்கு புதுவருடம் என்பதால் பாாட்டி வைப்பதற்காக சரக்கு வைத்திருப்பதாக கூறினார். நான் என் மகனிடம் பாத்ரூம் சென்றுவிட்டு வந்துவிடவேண்டும் என்றும் சரக்கு எல்லாம் அடிக்ககூடாது என்றும் கூறினேன். அதன்பிறகு சூர்யா என் மகனை அழைத்து சென்றுவிட்டார். நான் வேலைக்கு சென்றுவிட்டேன். சுமார் 8.45, 9.00 மணிக்கு என் மனைவி என் மகனை கத்தியால் குத்திபோட்டு விட்டார்கள் என்று கூறினார். காலையில் பாத்ரூம்மிற்கு அழைத்துச்சென்ற சூர்யாதான் குத்திபோட்டு விட்டதாக கூறினார். நான் என் நண்பரின் இருசக்கர வாகனத்தில் உடனடியாக வந்தேன். நான் ஆவடி ரோடு சிக்னல் அருகே உள்ள பொது கழிப்பிடத்திற்கு பின்புறம் என் மகனை கழுத்திலும் நெஞ்சிலும் முதுகிலும் மற்றும் பல இடத்திலும் குத்தி கால்வாயில் சேற்றில் கிடந்தார்.

அந்த இடம் முழுவதும் இரத்தமாக கிடந்தது. குண, லோகேஷ் என்ற 2 சிறுவர்கள் சூர்யா கத்தியால் என் மகனை குத்தி விட்டு ஒடிவிட்டதாக என் மகளிடம் சொன்னதாகவும் அதை என் மனைவி என்னிடம் கூறினார். என் மனைவி எனக்கு போன் செய்தார். காலையில் கழிப்பிற்கு சென்ற சூர்யா பிரகாஷை குத்தி போட்டுவிட்டதாக என் மனைவி எனக்கு போனில் கூறினார். சுமார் 6 மாதத்திற்கு முன்பு சீட்டு விளையாட்டு தகராறில் எதிரியை என் மகன் அடித்துவிட்ட முன்விரோதத்தை எதிரி மனதில் வைத்து நைஸாக என் மகனை அழைத்து சென்றுவிட்டார். அதன்பிறகு நான் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். நான் கொடுத்த புகார் Ex.P.1 ஆகும். போலீசார் என்னை விசாரணை செய்தனர். அதே தினம் மாலை 7.00 மணிக்கு காவல் நிலையத்திலிருந்து எனக்கு போன் செய்து காவல் நிலையத்திற்கு வருமாறு கூறினார். நான் காவல்நிலையம் சென்றேன். நான் எதிரி சூர்யாவை அவர்தான் காலையில் என் மகனை அழைத்துசென்றார் என்று அடையாம் காட்டினேன். போலீசார் என்னை விசாரணை செய்தனர். சம்பவத்தன்று என்மகனை அழைத்துச்சென்ற எதிரி சூர்யா தற்போது நீதிமன்ற ஆஜரில் இருக்கிறார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வருமான வரித்துறை அலுவலகத்தில் ஒப்பந்ததாரர் மூலமாக நான் கூலி வேலைக்கு சென்றேன். முரளி, சந்தோஷ், சுகுமார் ஆகியோர் என் வீட்டிற்கு அருகிலிருக்கும் என் நண்பர்கள் என்றால் சரியல்ல. என்னுடைய வேலைக்கான அடையாள அட்டையை போலீசார் கேட்கவில்லை. நான் சம்பவத்தன்று வேலைக்கு செல்லவில்லை என்றாலும் மேற்கூரிய என் நண்பர்களுடன் குடித்துவிட்டு தெலுங்கு பெண்களிடம் வம்பு செய்துகொண்டிருப்போம் என்றால் சரியல்ல. குடித்துவிட்டு தாய கட்டு விளையாடி கொண்டிருப்பதுதான் எங்கள் வேலை என்றால் சரியல்ல. என் தாயார் உயிருடன் இருக்கிறார். நான் வேலைக்கே செல்வதில்லை என்றாலும் என் தாயார்தான் என்னுடைய குடும்பத்தை கவனித்துகொள்கிறார் என்றாலும் சரியல்ல. பிடிப்புகள் போக மாத சம்பளமாக நான் 12,000 ரூபாய் வருமானம் பெறுகிறேன். என்னுடைய சம்பள சான்றிதழை போலீசார் கேட்கவில்லை நானும் கொடுக்கவில்லை. காலை 8.30 லிருந்து மாலை 4.30 மணி வரை என்னுடைய வேலை நேரம் ஆகும். 8 மணி நேரம் என்னுடைய வேலை நேரம் ஆகும்.

4வருடமாக நான் வருமான வரித்துறை அலுவலகத்தில் வேலை செய்கிறேன். நான் வேலை செய்வதற்கான ஆவணத்தை போலீசார் கேட்கவில்லை அதனால் நான் கொடுக்கவில்லை. வருமான வரித்துறை அலுவலகத்தில் வேலை செய்தவற்கு முன்பு நான் பெயிண்டிங் கூலி வேலை செய்து வந்தேன். நான் இருக்கின்ற வீட்டு வசதி துறை காலணியில் 1472 வீடுகள் உள்ளது. சம்பவம் நடந்த சமயத்தில் ஐ.சி.எப் குடிசை வீட்டில் இருந்தேன். ஐ.சி.எப் சாலை முக்கிய சாலை என்றாலும் அது பெரிதான சாலை என்றாலும் சரிதான். நான் நேரடியாக சம்பவத்தை பார்க்கவில்லை. ஐ.சி.எப்லிருந்து பேருந்து நிறுத்தத்திற்கு செல்லும் சாலை உள்ளது. காலை 8 மணிக்கு அந்த இடத்தில் பொதுமக்கள் போக்குவரத்து அதிகமாக உள்ள இடம் என்றால் சரிதான். ஆனால் என் மகனை கொலை செய்தது முள்ளு தோப்பு அங்கு யாரும் செல்லமாட்டார்கள். அந்த முள்ளு தோப்பு ஐ.சி.எப் சாலையை ஒட்டி உள்ளது என்றால் சரியல்ல. மதுபானத்துடன் வந்தவருடன் நான் என் மகனை அனுப்பயிருக்க மாட்டேன் என்றால் சரியல்ல. அவர் என் மகனின் கூட்டாளி. என்மகன் இறந்த சமயத்தில் பச்சையப்ப கல்லூரியில் பி.காம் படித்துக்கொண்டிருந்தார். சம்பவத்தன்று அவருக்கு கல்லூரி விடுமுறை நாள். எதிரி வெல்டிங் கடையில் வேலை செய்பவர் என்பதாலும் அவருடன் எனக்கு சம்மந்தம் இல்லை என்றாலும் சரியல்ல. அவர் என் மகனின் கூட்டாளி. புதுவருட கொண்டாட்டம் நடுராத்திரி நடைபெற்று அதில் யாரோ என் மகனை கொன்று விட்டார்கள் என்றால் சரியல்ல. என் மகனுக்கு சுசிகரன் நல்ல நண்பர் என்றால் சரிதான். சுசிகரன் என் மகனை இரவு அழைத்துசென்றார் என்றாலும் பின்னர் என் மகன் வீட்டிற்கு வரவே இல்லை என்றாலும் சரியல்ல. என் மகன் இரவு சர்ச்சுக்கு சென்றுவிட்டு வீட்டிற்கு வந்து படுத்துவிட்டார். என் மகனை நான் கூறியது போல் 1.1.2018 அன்று எதிரி என் வீட்டிற்கு வந்து என் மகனை அழைத்து செல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரி மேற்படி தேதி இரவு சர்ச்சுக்கு சென்றுவிட்டு மீண்டும் அதிகாலையிலேயே சர்ச்சுக்கு சென்றுவிட்டார் அதனால் காலையில் என் வீட்டிற்கு வந்து நான் கூறுவதுபோல் என் மகனை அழைத்துச்செல்லவில்லை என்றால் சரியல்ல. அவர்தான் அழைத்துச்சென்றார். எதிரிக்கு சீட்டு விளையாடும் பழக்கம் இல்லை என்றால் சரியல்ல. அதை அவர் விளையாடி காவல்நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டுள்ளது. எதிரி மீதுதான் சீட்டாடி வழக்கு காவல்நிலையத்தில் உள்ளது. எனக்கு படிக்க தெரியாது. என்னுடன் சுசிகரனை காவல்நிலையத்திற்கு

அழைத்துச்சென்றேன் அவர் படித்துள்ளார். நான் சொல்ல சொல்ல புகாரை அவர்தான் எழுதினார். எனக்கு அதை அவர் படித்து காட்டினார். நான் கையெழுத்து போட்டு ஆய்வாளரிடம் கொடுத்தேன். நான் வெள்ளை பேப்பரில் கையெழுத்து போட்டு ஆய்வாளரிடம் கொடுத்தேன் என்றால் சரியல்ல. ஐ.சி.எப் மெயின் ரோடில் காலையில் போக்குவரத்து போலீசார் இருப்பார்கள் என்றால் சரிதான். புதர் பகுதியில் யாரும் இருக்கமாட்டார்கள். நான் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் என்னுடைய மகனின் கொலைக்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. என் மகனுக்கு எதிரிகள் நிறைய இருக்கிறார்கள் என்றால் சரியல்ல. என் மகனுக்கு எதிரிகள் யாரும் இல்லை. எதிரியையும் என் மகனின் நண்பன் என்றுதான் நினைத்தேன்.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness and admitted and signed by the witness to be correct.

Dt. 21.02.2020 III Addl. District Judge.